**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை - ''சலவைத் துறை கட்டுதல்'' பொருள் ஊரக வளர்ச்சி/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளுக்கு மாற்றம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண். 65
நாள் 29.6.2000

திருவள்ளுவராண்டு 2031

விக்கிரம ஆனி 15

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.150, சமூக நலத்துறை, நாள் 29.1.71.
அரசாணை (நிலை) எண்.1193, சமூக நலத்துறை, நாள் 5.10.71.
அரசாணை (நிலை) எண்.1080, சமூக நலத்துறை, நாள் 14.12.72.
மாநில திட்டக் குழுவின் கடித எண்.1295 / 99, நாள் 23.4.1999

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை துணைச் செயலரின் நேர்முக கடித எண்.1516 /PR1/ 2000, நாள் 14.3.2000.

ஆணை:

சலவைத் தொழிலாளர்கள் தங்கள் பூர்வீகத் தொழிலை சுத்தமான சூழ்நிலையிலும், தண்ணீர் பற்றாக்குறையின்றியும் தொடர்ந்து செய்திட ஏதுவாக முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ''சலவைத் துறை கட்டும் திட்டம்'' துவங்கப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் ஆரம்பத்தில் பகுதி கடன், பகுதி மானியம் என்ற அடிப்படையில் நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1971-72 இல் இத்திட்டம் துவக்கப்பட்டபோது இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி மான்யத்தொகை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலமும், கடன் தொகை நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் மூலமும் வழங்கப்பட்டு வந்தது. மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி 1972-73ம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை செயலாக்கம் செய்வது மற்றும் மானியம் மற்றும் கடன் தொகை வழங்குவது அன்றைய ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரால் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1988-89ஆம் ஆண்டு முதல் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியாக ஒரு இயக்குனரகம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, இத்திட்டம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மபினர் நல இயக்குநரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குனருக்கு ரூ.80,000 வரை திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டு முதல் சலவைத்துறைகள் கட்ட நிதி வழங்கும் திட்டம் மாநகராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது:-

விழுக்காடு

(1) அரசு மான்யம் 75
(2) உள்ளாட்சி நிறுவனத்தின் பங்கு 20
(3) பயனாளிகளின் பங்கு 5

2. மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகளும், பொறுப்புகளும் மற்றும் அதிகாரங்களும் வழங்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சமர்ப்பித்த உயர்மட்டக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ''சமுதாயக்கூடம் மற்றும் துணி வெளுக்கும் இடங்கள் முதலியவற்றை கட்டுதல் (மாநிலத் திட்டம்)'' என்பதனை செயல்படுத்துதல் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு அ.ஆ. (நிலை) எண் 77, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 25.4.98 இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. 1999-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் ஆளுநர் உரையில், 'பயனேதும் அளிக்க இயலாத திட்டங்கள்' கைவிடப்பட்டு, பயனுள்ள திட்டப்பணிகளும் திட்டங்களும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது. மேற்கூறிய அறிக்கையின் தொடர்பாக அரசின் பல்வேறு திட்டங்களையும் மாநில திட்டக்குழு ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி கோரப்பட்டது.

4. மாநில திட்டக்குழு இத்துறையினால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப்பணிகள் மற்றும் திட்டத்தில் சேராத பணிகள் ஆகியவற்றை ஆய்வு நடத்தி பல்வேறு பரிந்துரைகளை செய்துள்ளது. இதில், 'சலவைத் துறைகள் கட்டுதல்' திட்டத்தினை ஊரக வளர்ச்சித்துறைக்கு மாற்றலாம் என மாநில திட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகள் மீது 7.3.2000 அன்று திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையால் ஆய்வு செய்யப்பட்டதில் 'சலவைத் துறை கட்டுதல்' திட்டம் ஊரகவளர்ச்சித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைகளால் செயல்படுத்தப்படலாம் என முடிவு செய்யப் பட்டது.

5. மேற்கூறிய பரிந்துரைகளை நன்கு பரிசீலித்து, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையினால் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் இதுகாறும் செயல்படுத்தப்பட்டு வந்த ''சலவைத் துறை கட்டுதல்'' திட்டத்தினை ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறை மூலமும் நகாட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமும் செயல்படுத்த ஆணைகள் வெளியிடப்படுகின்றது.

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதல் அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 43975 /சந/ 2000 நாள் 27.6.2000-ல் பெற்று வெளியிடப்படுகிறது..

(ஆளுநரின் ஆணைப்படி)

ந..முருகன்,
அரசுச் செயலர்.

பெறுநர்,

தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்,சென்னை-9.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்நல இயக்குநர், சென்னை-5.
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை,பனகல் மாளிகை, சென்னை-5.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை-5.
மாநில திட்டக்குழு, சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:-

ஊரக வளர்ச்சித் துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை-9.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
நிதி (சந) துறை, சென்னை-9.
நிதி (வரவு-செலவு) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//